**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No. C.C. No.217/2020**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-3, L.W- 5 |
| Name | : Sakthimurugan | Defence | : |
| Father Name | : Kasinadhan | Court | : |
| Village | :Periya Street, Kodaikaramullai | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : /2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 26.08.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பங்களில் என்னுடையது எதுவுமில்லை. வழக்கு சம்பவம் பற்றி 2 , 3 நாட்கள் கழித்துதான் தெரியும். சம்வத்தன்று நான் ஊரில் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 , எதிரிகள் மற்றும் ஆஜர் எதிரிகள் அனைவரும் ஒரே தெருவில் வசிக்கிறோம் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக புதுப்பட்டிணம் போலிசார் 1-வது எதிரியை 17.06.2019 அன்று 16.30 மணிக்கு பன்னீர்க்கோட்டகம் செக் போஸ்ட் பஸ்ஸ்டாப் அருகே கைது செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது.

2-வது எதிரி நாகப்பட்டிணம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. கடந்த 04.06.2019 அன்று நடந்த வழக்கு சம்பவ இடத்தை போலிசார் 17.06.2019 தேதி 14.30 மணிக்கு பார்வையிட்டு தயார் செய்த வரைப்படத்திற்கு சாட்சியாக பார்வை மகசரில் நானும் சாட்சி தமிழன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை

போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** இல்லை.